பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 01 | ஞாயிற்றுக்கிழமை | 17.11.2024 | அதிர்வு 107

## நாளை நியமிக்கப்படவுள்ளது புதிய அரசின் அமைச்சரவை

### வசந்த சமரசிங்க தகவல்



புதிய அரசின் அமைச்சரவை நாளை திங்கட்கிழமை நியமிக்கப்படவுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் சார்பில்

05




### தேசியப் பட்டியல் எம்.பியாக யாரை நியமிப்பது?

# வவுனியாவில் இன்று கூடுகின்றது தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு

### அந்த ஆசனம் தனக்கு வேண்டும் என்று மாவை கடிதம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. விவகாரத்தைத் தீர்மானிப்பதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூடுகின்றது.

வவுனியாவில் காலை 9 மணியளவில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அரசியல் குழுவில் அங்கம் வகிக்கும் மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞானம், ப.சத்தியலிங்கம், சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், கி.துரைராஜசிங்கம், தவராசா கலையரசன், கவீந்திரன் கோடீஸ்வரன், சண்முகம் குகதாசன் மற்றும் குலநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

05

## தமிழ் மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையைச் சிதைக்கமாட்டோம்

### தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் றில்வின் சில்வா உறுதி



"வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களும் எம் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். எமது

05




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்ற விடயம்தான் தமிழர் அரசியலில் இன்று சர்ச்சையை கிளப்பும் முக்கிய விவகாரமாக இருக்கின்றது. அது குறித்து ஆராய தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இன்று வவுனியாவில் கூடுகின்றது.

இது தொடர்பான முடிவை எடுக்கும் அதிகாரம் கட்சியின்

05

உடனிருந்த அனைவருக்கும்

உள்ளார்ந்த நன்றிகள்...!

நடைபெற்று முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், தங்கள் வாக்குகளால் எனக்கு ஆணை வழங்கிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

கடந்த 15 வருடகால அரசியற் பயணத்தில் என் ஆத்மபலமாகவும், அரசியற் பலமாகவும் தம் உடனிருப்பை வழங்கி, கொள்கையின்பாற்பட்ட பயணத்தின் பங்குதாரர்களாக இருந்த உங்கள் ஒவ்வொருவரது கரங்களையும் நன்றியோடு பற்றிக் கொள்கிறேன்.

என்னுள் நானாக இருந்து என்னை இயக்கும் எங்கள் தேசத்தில் விதையுண்ட ஆத்மாக்களின் அரூப பலத்தோடு, என் மக்களுக்கான தமிழ்த்தேசியப் பயணத்தை தடையற்றுத் தொடர்வேன்.



"நிலையிழக்க வைத்த அலைகளின் நடுவே தமிழ்த்தேசியக் கொள்கைக்கு கிடைத்த இந்த வெற்றி கார்த்திகையின் கனதியை உறுதி செய்யட்டும்"

என்றும் மக்கள் பணியில்,
சிவஞானம் சிறீதரன்.

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராகச் செயற்பட மாட்டோம்

## தமிழரசின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே. தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

"நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரானவர்கள் அல்லது எதிர்ப்பானவர்கள் அல்லர்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சி இருந்த போது நாங்கள் ஆறு ஆசனங்களைப் பெற்றிருந்தோம். ஆனால், இப்போது தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டு எட்டு ஆசனங்களை அதுவும் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பெற்றிருக்கின்றது.

எங்கள் கட்சிக்கு வாக்களித்த அத்தனை மக்களுக்கும் அதேபோல் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றோம். எமது மக்களுடைய உரிமை சார்ந்த எமது பயணம் தொடரும்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி அலையாக அல்லது சுனாமியாக இந்த முறை வெற்றியைப் பதிவு செய்திருக்கின்றது. இந்தக் கட்சி மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்கின்றது. இந்தக் கட்சியில் யாழ்ப்பாணத்திலும், ஏனைய இடங்களிலும் சிலர் தெரிவு செய்யப்பட்டும் உள்ளனர்.

ஆகவே, நாங்கள் கட்சி சார்ந்து அல்லது கொள்கை சார்ந்து சொல்லக்கூடிய விடயம் என்னவென்றால் அநுர தரப்பினர் முன்னைய காலத்தில் 13 ஆவது திருத்தத்துக்கும் மாகாண சபை முறைமைக்கு எதிராகவும் போராடியவர்கள். ஆனால், இப்போது தமிழ் மக்கள் அதனை விரும்புவதாலும், புதிய அரசமைப்பைக் கொண்டு வரவுள்ளதாலும் அந்த முறைமை அப்படியே இருக்கட்டும் என்றவாறான மாற்றமொன்று அவர்களிடத்தே ஏற்பட்டிருக்கின்றது.

அன்று அநுர தரப்பு எதிராக நின்றாலும் இப்போது மாற்றம் வந்துள்ளது. அந்த மாற்றம் என்பது தமிழ் மக்களின் அனைத்து விடயங்களிலும் ஏற்பட வேண்டும். ஆகையினால் நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்கள் அரசுக்கு எதிரானவர்கள் அல்லது எதிர்ப்பானவர்கள் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகின்றோம்.

ஆகவே, நாங்கள் கேட்பது எங்கள் இனத்துவ அடையாளத்தை எங்களது தாயகத்தில் பேணிக் கொண்டு எங்களுடைய கருமங்களை நாங்களே நிர்வகிக்கக் கூடிய ஒரு கட்டமைப்பைத்தான் நாங்கள் கோரி நிற்கின்றோம்.

இந்த விடயத்தை உங்களுக்குச் சமர்ப்பித்து ஏற்கனவே மாகாண சபை விடயத்தை நீங்கள் மீளாய்வு செய்து போல எங்களுடைய இந்தக் கோரிக்கையையும் மீளாய்வு செய்து தீர்வுகளை வழங்க வேண்டும்.

இப்போது உங்களுக்கு இருக்கின்ற ஆட்சிப் பலம், ஆதரவு பலம், மக்கள் பலம் என எல்லாப் பலத்தையும் பயன்படுத்திக் கொண்டு மக்கள் ஆணையைப் பெற்ற நீங்கள் உங்கள் கொள்கையை மீளாய்வு செய்து தமிழ் மக்களையும் அணைத்துச் செல்லக் கூடியதாகப் பயணம் அமைய வேண்டும்.

ஆனால், தனியே சிங்களத் தேசியம் அல்லது நாட்டுத் தேசியம் என்று சொல்லி எங்களை அதற்குள் முடக்கிவிட நினைப்பது பொருத்தமானதல்ல. அவ்வாறு சிங்களத் தேசியத்துக்குள் கரைந்து போக எங்களுக்கு எப்போதும் உடன்பாடில்லை.

ஆகவே, எங்களுடைய இனத்துவ அடையாளங்களைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று கட்சி சார்பில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்." – என்றார்.









# தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் அரசியல் குழுவே இறுதி முடிவு எடுக்கும்

## தமிழரசுக் கட்சி அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் கட்சி எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. கட்சியின் அரசியல் குழு கூடியே யாரை நியமிப்பது என இறுதி முடிவு எடுக்கும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு முடிவும் கட்சியால் எடுக்கப்படவில்லலை.

இதனால் கட்சியின் அரசியல் குழு கூடி ஒரு முடிவு எடுக்கும் என நான் நம்புகின்றேன். அதேநேரத்தில் இப்போது வரையில் யாரையும் யாரும் தீர்மானித்ததாகவும் எனக்குத் தெரியவும் இல்லை.

எனினும், தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில் வேறு எவரும் யாருடனேயும் ஏதும் பேசியிருக்கின்றார்களோ என்றும் தெரியவில்லை.

ஆனாலும், கட்சியைப் பொறுத்த வரையில் இதுவரையில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. ஆகவே, கட்சியின் அரசியல் குழு கூடி இந்த நியமனம் தொடர்பில் நிச்சயம் ஒரு முடிவு எடுக்கும்." – என்றார்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவாரா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்துக்குப் போக மாட்டேன் என்றும், அவ்வாறு தேசியப் பட்டியல் மூலமாகச் செல்வதற்குத் தனக்கு விருப்பம் இல்லை என்றும் சுமந்திரன் தெளிவாகத் தன்னிடம் சொல்லியுள்ளார் என்று சிவஞானம் கூறினார்.

# வெளிநாட்டு பணம் அனுப்பல் 3.9 சதவீதத்தினால் அதிகரிப்பு

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் வெளிநாட்டு பணவனுப்பல் 3.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் ஜனவரி முதல் ஒக்டோபர் மாதம் வரை வெளிநாட்டு பணவனுப்பல் 1,588.2 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

அதற்கமைய இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வெளிநாட்டு பணவனுப்பல் 1,650 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.





# மேலதிக பஸ் சேவை

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தமது சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் கொழும்பு நோக்கி வருவதற்காக மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமல் சிறி வர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி விசேட பஸ் சேவைகள் நாளை வரை நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்காக அதிகளவான மக்கள் சென்ற பகுதிகளுக்குக் கொழும்பிலிருந்து மேலதிகமாக பஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விசேடமாக ஹட்டன், கண்டி, பதுளை, அனுராதபுரம், பொலன்னறுவை, காலி ஆகிய மாத்தறை ஆகிய பகுதிகளுக் கான போக்குவரத்து ஏற்பாடுகளை இலங்கை போக்குவரத்து சபையின் அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் வாழ்க்கையிலிருந்து மஹிந்தானந்த ஓய்வு பெறுகிறார்



தமது 30 வருடகால அரசியல் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறுவதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் உள்ள தமது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருட பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன் னணியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட தமக்கு 20, 401 வாக்குகளை மக்கள் அளித்துள்ளனர்.

எனவே, கடந்த பொதுத்தேர்தலில் சுமார் 200, 000 வாக்குகளைப் பெற்ற தமது அரசியல் சேவை தொடர்ந்தும் தேவையில்லை என்பதை மக்கள் வெளிக்காட்டியதன் கார ணமாகவே அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக முன் னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித் துள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 50 மில்லியன் டொலர்கள் கடனுதவி

இலங்கைக்கு 50 மில்லி யன் டொலர் கடனுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள் ளது.

இலங்கையில் சோலார் பேனல் திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக இந்த கடனுத வியை வழங்குவதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதற்காக இலங்கையின் 10 நிதி நிறுவனங்களுடன் இணைந்து குறைந்த வட்டி யில் கடன் வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியல் குழுவுக்கு உரியதா அல்லது மத்திய குழுவுக்கு உரியதா என்ற சர்ச்சை இருந்தாலும், முன்னர் அரசியல் குழுவைக் கூடக் கூட்டாமல் உயர்மட்டத்தில் சிலர் மட்டும் கூடி முடிவெடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

'மாவட்ட ரீதியிலான தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டால் அதன் பின்னர் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் போக மாட்டேன்' – என்ற தமது முடிவில் சுமந்திரன் மிகவும் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கின்றார் என்று தெரிகின்றது.

அவரை நாடாளுமன்றத்துக்குள் இப்போதைக்கு வர விடக்கூடாது என்பதில் அதிலும் விட உறுதியாக சிறிதரன் இருக்கின்றார் என்றும் அறிய முடிந்தது.

தமிழரசு நாடாளுமன்றக் குழு தலைவர் பதவியில் கண் வைத்திருக்கும் சிறிதரன், இப்போது சுமந்திரனை நுழைய விட்டால் நாடாளுமன்றக் குழுவுக்குள் தமது முக்கியத்துவம் பின் தள்ளப்பட்டு விடும் என்றும் கருதக் கூடும்.

ஆயினும், தமிழரசு நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியைப் பொறுப்பேற்று, சபாநாயகர் தலைமையில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சிறிதரனினால் காரியமாற்ற முடியுமா என்பது கேள்வியே. சம்பந்தன் கூட தம்மால் அதை கையாள்வது கஷ்டம் என்று கருதியே தம் பிரதிநிதியாக சுமந்திரனையே அவ்வேலைக்குப் பயன்படுத்தினார். கடந்த 14 ஆண்டுகளாக சுமந்திரனே தமிழரசு சார்பில் – தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் – அப்பணியை ஆற்றி வந்தார். அப்படி சிறிதரன் ஆற்றுவதற்கு அவருக்கு மொழிச் சிக்கல் உண்டு. சம்பந்தன் இதுவரை காலமும் சுமந்திரனைப் பயன்படுத்தியமை போல சிறிதரன், சாணக்கியனைப் பயன்படுத்த முயலக் கூடும்.

கடந்த நாடாளுமன்றத்தில் அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவிக்கு தமிழரசுக்கு உரித்து இருந்தும் – அப்பதவிக்கு சித்தார்த்தனைத் தமிழரசு நியமித்து இருந்தும் – விமல் வீரவன்ஸ தரப்பின் எதிர்ப்பால் அந்த நியமனத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கடைசிவரை வழங்காமல் இழுத்தடித்துத் தவிர்த்து விட்டார்.

இந்தத் தடவையும் மூன்றாவது பெரிய கட்சியான தமிழரசுக்கு அந்த இடம் கிட்டுகின்றது. அதைத் தமிழரசு தங்கள் எட்டு எம்.பிக்களில் யாருக்கு வழங்கப் போகின்றது என்ற கேள்வி உண்டு.

இதற்கிடையில் –

அரசியலில் அண்மைக் காலத்தில் 'சணம் பித்தம், சணம் வாதம்' என்பது போல அரசியல் குழப்பங்கள், குளறுபடிகளைத் தொடர்ந்து செய்து வந்த மாவை சேனாதிராஜாவுக்கும், வழமை போல அவரைப் பற்றிப் பீடித்திருக்கும் பதவி ஆசையும் சுயநல அரசியலும் இப்போது மீண்டும் அவரை உருவேற்றி இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. தமிழரசின் தேசிய பட்டியல் பதவி ஆசையில் அவரும் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைகின்றார் என்று கேள்வி. அந்தப் பதவியைத் தமக்குத் தருமாறு அவரும் எழுத்தில் விண்ணப்பித்திருக்கின்றார்.

இந்தத் தேர்தலில் ஒரு பிரசாரக் கூட்டத்தில் கூட அவர் பங்கு பற்ற வில்லை. கட்சியின் தலைவர் அவர் தானா என்பதில் இன்னும் குழப்பம் நீடிக்கின்றது. 'சணம் பித்தம், சணம் வாதம்' போன்று குழப்பமாகச் செயற்படும் அவரின் அரசியல் நோய் காரணமாக அவர் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, இப்போதும் அந்தப் பதவியில் இருப்பவர் போல பிகு பண்ணிக்கொண்டு திரிகின்றார். வயோதிபத் தாளாண்மையில் – முதுமையில் – உழலும் அவருக்கு தேசியப் பட்டியல் எம்.பி. என்ற பதவி ஆசை தலையின் உச்சத்திற்கு ஏறி இருப்பதாக கூறப்படுகின்றது. அது எப்போதும் அவருடன் தொடரும் நப்பாசைப் பிணி தான்.

அவரது பதவியாசையும் சுயநலமும் அவரை விட்டுப் பிரிக்க முடியாதவை. அதனால் இந்தத் தேசியப் பட்டியல் பதவிக்கும் அவர் இந்த முதுமைத் தடுமாற்றத்திலும் ஆலாய்ப் பறப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை.

அவருக்குத் தற்காலிகமாக ஒரு வருட காலம் அந்தத் தேசியப் பட்டியல் நியமனத்தை வழங்கலாம் என்ற ஓர் ஏற்பாட்டுக்கு ஒரு தரப்பு இணங்கி விரும்பினாலும், கட்சியின் மத்திய குழுவோ அரசியல் குழுவோ அதற்கு இடமளிக்கவே மாட்டாது என்பது உறுதியானதாகத் தெரிகிறது.

கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம், கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் மற்றும் இந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற பலர் இந்தப் பதவியில் கண் வைத்திருக்கின்றனர் என்றும் தெரிகின்றது.

இந்தத் தெரிவில் சுமந்திரனோடு இணங்கி – இயைந்து – போகாமல் சிறிதரன் முரண்டு பிடிப்பாராயின் மேலும் பல சிக்கல்களை – நெருக்கடிகளை – சிறிதரன் எதிர்காலத்தில் எதிர்கொள்ளக்கூடிய சூழல் உருவாகும் ஏதுநிலை தென்படுகின்றது. அவற்றின் விவரங்களை காலம்தாழ்த்திக் கோடி காட்டலாம் என்று நினைக்கிறேன்.

அவசரப்பட்டு இப்போது நாடாளுமன்றுக்கு செல்லும் எண்ணம் ஏதும் சுமந்திரனுக்கு இல்லை. நாடாளுமன்றத்தில் தமது வெற்றிடம் உணரப்படுவது தமது எதிர்கால அரசியலுக்கு நலம் என்று அவர் கருதுகின்றார் போலும்.

மிக விரைவில் நடக்கும் என எதிர்பார்க்கப்படும் மாகாண சபை தேர்தல் வந்தால் அதில் வடக்கு முதலமைச்சர் பதவியில் கண் வைத்திருக்கும் அவா சிறிதரனுக்கு இருப்பதாகத் தெரிகின்றது. அதனாலும் காலகதியில் எம்.பி. பதவி நிலையில் மாற்றம் ஏற்படக்கூடிய சூழல் உண்டு.

இவை எல்லாவற்றிக்கும் இடையில் பழைய நாடாளுமன்றத்தின் 'பார் பெர்மிற்' விவகாரம் இன்னும் நிலுவையில்தான் உள்ளது. நாடாளுமன்றத்தில் தனது நிலைமை எதிர்பார்த்ததை விட வலுவாகி விட்டமையால் இது விடயத்தில் இதுவரை மௌனம் பேணிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மெல்ல புதிய விடயங்களை அவிழ்த்து விடும் ஏது நிலையும் உண்டு.

அநுர குமார – சுமந்திரன் நட்பு அந்த விவகாரத்தை அம்பலப்படுத்த உதவக் கூடும்.

இப்படி பல முனைச் சிக்கல்கள் காத்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழரசுத் தலைவர்கள் தங்களுக்குள் இணங்கி, ஒன்றுபட்டு ஒரு முடிவை எடுப்பார்களாயின் அது கட்சிக்கும் நல்லது. அதன் முக்கிய பிரமுகர்களுக்கும் அது நல்லது.

தமிழரசு வழக்குகள் வர முன்னர் நேரகாலத்தோடு பல தடவைகள் அது குறித்து முன்னறிவிப்பாக எச்சரித்தேன். நான் யார் சார்பிலோ அச்சுறுத்தல் விடுக்கிறேன் என்றே அப்போது அந்த எச்சரிக்கைகள் கணக்கெடுக்கப்பட்டன.

இப்போதும் இயைந்து போங்கள் என்ற என் ஆலோசனையும் கூட அத்தகையதே. எதிர்காலத்தில் நெருங்கி வரக் கூடிய விபரீதங்களை என்னால் உய்த்துணர முடிகின்றது. வீம்பு பண்ணாமல் இயைந்து போங்கள்! என் உரிமையுடன் கூடிய ஆலோசனை அதுதான். ஏற்பதும் விடுவதும் சம்பப்பட்டோரைப் பொறுத்தது!

## நாளை நியமிக்கப்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமைபுதியநாடாளுமன்றம்கூடவுள்ளது. அதன் பின்னர் எமது பணிகள் விரைவாக தொடங்கப்படும்.

அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளை எமது அரசு உடனடியாக ஆரம்பிக்கும்.

இந்த அமைச்சரவை அதிகபட்சமாக 25 அமைச்சர்களைக் கொண்டதாக இருக்கும். அதிகபட்சமாக 25 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர்." – என்றார்.

இராஜாங்க அமைச்சர்களோ அல்லது அமைச்சரவை அல்லாத அமைச்சர்களோ நியமிக்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள் எம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தோழமையை ஏற்றுள்ளனர். அவர்களுக்கு நன்றி. நிச்சயம் அவர்களின் நம்பிக்கையைச் சிதைக்கமாட்டோம்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழுஉறுப்பினரும்ஜே.வி.பியின் செயலாளருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"நாடாளுமன்றத் தேர்தலில் எமக்குக் கிடைக்கப் பெற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை விடவும் வடக்கில் இரண்டு தேர்தல் மாவட்டங்களையும் வென்று தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றது பெரும் பலமாகும். அந்த நம்பிக்கையை நிச்சயம் நாம் பாதுகாப்போம்.

நாம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை எதிர்பார்க்கவில்லை. எனினும், மக்கள் வழங்கிவிட்டனர். அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தாமல், மக்கள் வழங்கிய பொறுப்பை நிச்சயம் முறையாக நிறைவேற்றுவோம். மக்கள் வழங்கிய ஆணை மகிழ்ச்சியாக உள்ளது." – என்றார்.

## வவுனியாவில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி, ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றிருந்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியலில் முதலாவது பெயராக மாவை சேனாதிராஜா குறிப்பிடப்பட்டுள்ளார். இந்நிலையில், தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தன்னை நியமிக்குமாறு கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கத்திடம், மாவை சேனாதிராஜா எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை, இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த சிலரும் தமக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளனர்.

இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணும் வகையில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இன்று கூடுகின்றது.

## புதிய அரசமைப்பு வரைவு தொடர்பான

# சுமந்திரனின் கோரிக்கையை நிராகரித்தார் கஜேந்திரகுமார்



(எஸ்.நிதர்ஷன்)

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், அவர் சார்ந்த தேசிய மக்கள் சக்தியும் ஒரு புதிய அரசமைப்பாக எண்ணியிருக்கின்ற வரைவை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தேசியம் சார்ந்த அரசியலுக்கும் கொள்கை சார்ந்த – தமிழ் மக்களுடைய இருப்பு சார்ந்த விடயங்களுக்கும் எதிர்காலம் மிகவும் சவாலுக்குரிய ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம். இதில் வரப் போகின்ற ஐந்து வருடங்களில் மிக முக்கியமாக வரப் போகின்ற முதலாவது வருடம்தான்.

தேர்தல் முடிவுக்குப் பிற்பாடு கூட ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தங்களது கட்சிக்கு வடக்கில் ஆசனங்கள் கிடைத்துள்ளன எனவும், இனவாதத்தை மக்கள் நிராகரித்துள்ளனர் எனவும் சொல்லலியுள்ளார். அந்தக் கருத்திலேயே தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய ஆபத்துக்கள் மிகத் தெளிவாக அம்பலமாகியுள்ளன.

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த நிலைப்பாட்டுக்கு இத்தனை வருடங்களாகத் தமிழ் மக்கள் ஆணை வழங்கி வந்திருக்கின்ற நிலையில் அந்த ஆணையை இனவாதம் என்று சொல்லிக் கொச்சைப்படுத்துகின்ற வகையில் ரில்வின் சில்வா பேசியுள்ளார்.

உண்மையில் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு எதிராகத் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கின்ற நிலையில் அந்தத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இனவாத நிலைப்பாடாகக் கொச்சைப்படுத்தி இன்றைக்குத் தேர்தல் முறையில் உள்ள ஒரு சில முறைகளால் எண்ணிக்கையில் ஒரு சில ஆசனங்களைப் பெற்றுக்கொண்டதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை நிராகரிக்கின்ற என்று சொல்கின்ற கருத்துக்கள் எந்தளவுக்கு ஆபத்து என்பதை எமது மக்கள் உணர வேண்டும்.

அந்தவகையில்தான் தேர்தல் காலத்திலும் நாம் எமது மக்களுக்குத் தொடர்ச்சியாக ஒரு விடயத்தைச் சொல்லி வந்தோம். அதாவது இந்த அரசு தேர்தல் முடிந்த கையோடு 2015 முதல் 2019 வரை தயாரிக்கப்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சி அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னோம்.

அந்த ஒற்றையாட்சி ஏக்கிய ராஜ்ஜியவை நிராகரித்து எங்களுடைய மக்களின் ஆணையைக் காட்டி தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்வுக்குக் கடுமையான அழுத்தங்களைக் கொடுப்போம் என்ற கருத்தைத்தான் நாங்கள் சொல்லியிருந்தோம்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டித் தீர்வை எட்டுவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுக்க இருக்கின்றோம்.

அந்தச் செயற்பாடுகளோடு ஒத்துப்போவதற்குத் தயாராக இருக்கின்ற அனைத்து தரப்புகளோடும் செயற்பட நாங்கள் தயாராகவும் இருக்கின்றோம். விசேடமாக ஒற்றையாட்சி அரசமைப்பின் ஏக்கிய ராஜ்ஜிய என்ற இடைக்கால அறிக்கையை வடக்கு, கிழக்கில் தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளாது என்ற செய்தியை அமைதியான முறையிலும், ஜனநாயக முறையிலும் வெளிப்படுத்துவதற்கும், அதனைத் திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் வெளிப்படுத்தி எங்களது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அந்த நிலைப்பாட்டோடு ஒன்றிணைந்து போவதற்கு இருக்கின்ற அனைத்து தரப்புகளோடும் இணைந்து இந்த விடயங்களைக் கையாளுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். இந்த விடயத்தில் எம்மோடு இணைந்து செயற்படுவதற்கு முன்வருமாறு அறைகூவலும் விடுக்கின்றோம்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு விடயத்தை தமிழ் மக்கள் நிராகரிப்பார்களாக இருந்தால் அதுவே அழுத்தத்தை ஏற்படுத்தும் என்பதோடு தேசிய மக்கள் சக்தி அரசு ஐக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சி பாதையைக் கைவிட்டு சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்தக் கூடிய புதிய மேடையொன்றை உருவாக்கும். அந்த நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

ஏனென்றால் இன்றைக்கு இலங்கை அரசு சர்வதேச மட்டத்திலும், பொருளாதார ரீதியாகவும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் சர்வதேச சமூகத்தின் உதவி தேவை.

ஆனால், இலங்கையில் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு ஒரு ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படாத வரை அந்த உதவிகள் கிடைக்காது. ஆகவே, அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாங்கள் அந்த அழுத்தங்களைச் சரியான வகையில் கொடுக்க வேண்டும்.

இந்த விடயத்தில்தான் தமிழ்த் தேசியத்தோடு தாங்கள் பயணிக்கின்றதாகச் சொல்லக்கூடிய ஏனையவர்களோடும் சேர்ந்து பயணிக்கத் தயாராக இருக்கின்றோம்." – என்றார்.

இதேவேளை, நல்லாட்சி காலத்தில் தங்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஏக்கிய ராஜ்ஜிய என்ற புதிய அரசமைப்பு வரைபை அநுர அரசு மீளக் கொண்டு வரப் போவதாகவும், இந்த நேரத்தில் தான் நாடாளுமன்றத்தில் இல்லாத நிலையில் அந்தச் செயற்பாட்டைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கையாளுவார் என்றும் சுமந்திரன் தெரிவித்திருந்தார். இது குறித்த கேள்விக்குக் கஜேந்திரகுமார் பதிலளிக்கையில்,

"அவர் கூறுகின்றமை போன்று இந்த அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்ற விடயமல்ல. இன்றைக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், அவர் சார்ந்த தேசிய மக்கள் சக்தியும் ஒரு புதிய அரசமைப்பாக எண்ணியிருக்கின்ற வரைபை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்.

ஆகையினால் அந்த வரைபுக்கு எதிராக அதை நாங்கள் தடுத்து இது எமது மக்களின் இணைப்பு முரணானது என்ற பலமான ஒரு செய்தியைக் கொடுப்பதன் ஊடாக அவர்கள் சரியான ஒரு வரைபைத் தயாரிப்பதற்கும், அவர்களது செயற்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும்தான் எங்களுடைய முயற்சிகளை முன்னெடுக்கப் போகின்றோம்.

அதற்குத் தமிழரசுக் கட்சியாக இருக்கலாம், ஏனைய தமிழ்க் கட்சிகளாக இருக்கலாம், நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருக்கக் கூடிய தமிழ்க் கட்சிகளாக இருக்கலாம், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களாக இருக்கலாம், அனைவரையும் ஒன்றிணைத்து அந்த விடயங்களை முன்கொண்டு செல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெற்றியின் ஆபத்து

2022 ஜூலையில் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி கவிழ்ந்த பின்னர், வெளிநாட்டுக்குச் சென்றிருந்த அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ இவ்வாண்டு மார்ச் மாதம் அளவில் நாடு திரும்பியிருந்தார். அவரிடம் கோட்டாபயவின் ஆட்சி கவிழ்ந்ததற்கான காரணம் குறித்து கேட்கப்பட்டது.

"அதற்கு பொருளாதார, அரசியல் மற்றும் சமூகக் காரணங்கள் உள்ளன. தேர்தலில் மிகப் பெரும்பான்மை வெற்றி பெற்றோம் என்பது இறுதியில் சாபமாக மாறியது. அதுவும் நமது வீழ்ச்சிக்கு ஒரு காரணம். முழுமையான அதிகாரம் துஷ்பிரயோகம், ஊழல், மோசடிகளுக்கு வழி வகுத்தது" - என்று பதில் அளித்தார் பஸில் ராஜபக்ஷ.

அவரது அனுபவப் பாடம் இப்போது புதிய தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை ஒட்டியும் ஒரு பட்டறிவு முன்னுதாரணமாக சிந்திக்கப்பட வேண்டிய விவகாரமாக இருக்கின்றது.

அவரது கருத்தில் பொதிந்துள்ள அந்த அர்த்தத்தை இப்போதைய ஆட்சியாளர்கள் ஒரு வழிகாட்டல் பாடமாகக் கொள்ள வேண்டும்.

இதனையே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கு ஓர் எச்சரிக்கையாக முன் வைத்திருக்கிறார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குக் கிட்டிய பெரும் வெற்றியால் வரப் போகும் ஆபத்துக்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அவர் ஜனாதிபதியைக் கோரியிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஒரு கட்சி தனித்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தாண்டிப் பலம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

2010 இல் மஹிந்த அரசாங்கமும், 2020 இல் பொதுஜன பெரமுனவும் மூன்றில் இரண்டை நெருங்கிச் சென்றன. அத்துடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை உறுதி செய்ய சில எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவை அச்சமயம் ஆளும் தரப்பு பெற வேண்டியிருந்தது என்பதை சாலிய பீரிஸ் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆனால், இப்போது தேசிய மக்கள் சக்தி தனித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தாண்டி மேலும் அதிகமாக ஒன்பது ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா சுட்டிக் காட்டியமை போல் கடந்த காலங்களில் அரசியல் சக்திகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் சட்டங்களை இயற்றின. அந்த வேலையை தேசிய மக்கள் சக்தியும் முன்னெடுக்கக் கூடாது. ஜனநாயக உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை சிதைக்கும் சட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை இயற்றுவதற்கான எத்தனங்களை தேசிய மக்கள் சக்தி எதிர்க்க வேண்டும் என்று சாலிய பீரிஸ் கோருகின்றார்.

"எல்லையற்ற முழுமையான அதிகாரம் துஷ்பிரயோகம், ஊழல், மோசடிகளுக்கு வழி வகுத்தது" - என்ற பஸில் ராஜபக்ஷவின் ஒப்புதல் வாக்குமூலத்தை தனக்கான வழிகாட்டல் எச்சரிக்கையாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கொள்ள வேண்டும்.




# 10 ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது

10ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வு நாளில் பல்வேறு முக்கியமான நடவடிக்கைகள் நடைபெறுவதால் அன்றையநாள் மிகவும் விசேடதினதாகும்.

முதலாவது அமர்வில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கே பிரதான பொறுப்புக் காணப்படுகின்றது.

முதலாவது நாளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் இருக்காது என்பதுடன் விரும்பிய ஆசனத்தில் அமர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

செங்கோல் வைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுவது முதலாவது விடயமாக சபையில் முன்னெடுக்கப்படும்.

அதன் பின்னர் அரசமைப்பின் 64(1) உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 04, 05 மற்றும் 06 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபாநாயகரை வாக்களிப்பின் மூலம் நியமித்தல், சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதியுரை வழங்கப்படும்.

இதனையடுத்து பிரதி சாபாநாயகர், குழுக்களின் தலைவர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட் உறுப்பினர்கள் அனைவரும் முதலாவது நாடாளுமன்ற நாள் அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை எனும் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

இதில் சபாநாயகர் முதலில் கையொப்பமிடுவார் என்பதுடன் அடுத்து பிரதமர் கையொப்பமிட்டதும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பமிடுவது சம்பிரதாயமாகும்.

இந்த செயற்பாடுகள் பூர்த்தியடைந்ததும் முதல்நாள் அமர்வுகள் ஒத்திவைக்கப்படுவதுடன் அடுத்த நாடாளுமன்ற அமர்வு நாள் அறிவிக்கப்படும்.

எனினும் அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியினால் அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகன உரை நிகழ்த்தப்படுமாயின், முதல் நாளின் பிரதான பணிகள் நிறைவடைந்ததும் தற்காலிகமாக சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடும்போது ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்குத் தலைமைதாங்கி கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த முடியும்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தை அடுத்த அமர்வு தினத்துக்கு ஒத்திவைப்பார்.

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களுக்கு பேரவை அனுமதி

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களுக்கு அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசமைப்பு பேரவை நேற்று முன்தினம் இரவு கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவில் 05 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இதற்கமைய பேராசிரியர் கே. பீ. எல். சந்த்ரலால், பேராசிரியர் டபிள்யூ. பீ. ஏ. றொட்றிகோ, கலாநிதி எம். பீ. எஸ். பெர்ணான்டோ, பீ. ஹேன்னாயக்க மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி விக்கும் களுஆரச்சி ஆகியோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# முசல்பிட்டியில் 44,2680 ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது



புத்தளம் – கற்பிட்டி – முசல்பிட்டி பகுதியில் 44,2680 ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிடைத்த தகவலுக்கமைய இலங்கைக் கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பில் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

முசல்பிட்டி பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 18 போதைப்பொருள் பொதிகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் பொதிகள் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானோர் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி வெளியீடு

பொதுத் தேர்தலில் வாக்காளர்களால் 10 ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 196 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்துக்கமைய, இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தங்களது கட்சியின் சார்பில் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப் படவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கட்சிகள் அறிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் 29 தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும்.


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශේෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேடமானது
பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்



# பிரதம நீதியரசராக முர்து பெர்னாண்டோவை நியமிக்கும் பரிந்துரைக்கு பேரவை அங்கீகாரம்

பிரதம நீதியரசராக முர்து பெர்னாண்டோவை நியமிக்கும் பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசியலமைப்பு பேரவை நேற்று முன்தினம் இரவு மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

பிரதம நீதியரசராக முர்து பெர்னாண்டோவை நியமிப்பதற்கான பரிந்துரையை ஜனாதிபதி, அரசமைப்பு பேரவைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

# இடியுடன் கூடிய மழை தொடரும்; மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

மேல், மத்திய, சபரகமுவ, ஊவா, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் இன்றிரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சபரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் நாளை காலை வேளையில் மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




அத்துடன், மேல், சபரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் நாளை காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று பிற்பகல் 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாத்தளை, கேகாலை, குருநாகல், கம்பஹா மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம்!!









வி.எஸ்.சிவகரன்

“தலைவர்களே எப்பொழுதும் தடுமாறுவர், தொண்டர்கள் அல்லர்“ எனும் தந்தை செல்வநாயகத்தின் கூற்று இந்தத் தேர்தலில் வெளிப்பட்டுள்ளது.

யுத்தத்துக்கு பின்னர் 2010 தொடக்கம் 2015 வரை நடைபெற்ற ஏழு தேர்தல்களில் தமிழ் மக்கள் நெருக்கடிக்கு மத்தியிலும் தமிழ்த்தேசியத்திற்காகவே வாக்களித்தனர்.

2015 நல்லாட்சி அரசு என்னும் வெற்று கோசத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிக்குள் இருந்து கொண்டு ஆளுங்கட்சியாக செயற்பட்டு, இணக்க அரசியல் நடத்தி, அரசின் முகவராகப் பணியாற்றியதன் விளைவே தமிழ் மக்கள் கொழும்போடு ஐக்கியமாக முனைந்தனர்.

கோட்பாட்டு ரீதியான எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்த காலத்தில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் பால் முனைப்போடு இருந்தனர். தலைவர்கள் கொழும்போடு ஐக்கியமாகியதன் பின்னர் தமிழ் மக்களும் மெது மெதுவாக கொழும்பின் நிகழ்ச்சி நிரலுக்குள் இணங்க தொடங்கினர். தீர்க்கதரிசனமற்ற தலைமைகள் தமது சுயநலனும், சந்தரப்பவாதமும், சுய பொருளாதாரம் மேம்பாட்டுக்குமாக கொள்கைகள், கோட்பாடுகள் கடந்து அரசோடு இணங்கியதன் விளைவு 2024 பொதுத்தேர்தலில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் ஒருபோதும் மக்களில் தவறில்லை. கட்சிகளினுடைய சுயநலமும், சந்தர்ப்பவாதமும், பதவி மோகமும்தான் காரணம்.

இலங்கையிலே 70 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு பாரிய மாற்றம் கொழும்பு அரசியலில் இடம்பெற்றிருக்கிறது. பிளவு பட்ட தமிழ்த்தேசியக் கட்சிகள் அதனைப் புரிந்து கொள்ளாமல், வடக்கு – கிழக்கில் இருக்கும் தமிழ்க் கட்சிகளும் பழைய பஞ்சாங்கமாக இருந்ததன் விளைவே அவர்கள் தற்போது அனுபவிக்கின்றனர்.

தமிழ்த்தேசியம் பேசுகின்ற எந்த ஒரு கட்சிக்கும் உருப்படியான மக்கள் நம்பிக்கை உள்ள – அபிமானம் உள்ள – வாக்குக் கவர்ச்சியுடைய – தலைவர் இல்லை. பெயரளவிலே கட்சிகளுக்கு தலைவர்களாக இருக்கிறார்கள். மக்கள் அவர்களின் செயல்பாட்டை ரசிக்கவில்லை. தமிழரசுக்கட்சி தங்களின் உள்ளக முரண்பாட்டில் இலங்கை நீதிமன்றத்தில் நியாயம் கேட்டு நிற்கிறது. ஜனநாயக கூட்டணிக்குத் தலைவர் இல்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அவர்கள்தான் உலக மகா உத்தமர்கள் எனும் நினைப்பு. இந்த நிலையில் தமிழ் மக்கள் என்ன முடிவெடுப்பத? வாக்களிக்கும் கடைசி நேரம் வரைக்கும் பலரது கேள்வி அதுதான். யாருக்கு வாக்களிப்பது? ஏன் வாக்களிப்பது? வாக்களிப்பதனால் என்ன பயன்?

மக்கள் விரும்பக் கூடிய வேட்பாளர்களை தமிழ்த்தேசியக் கட்சிகள் நிறுத்தவில்லை என்கின்ற மிகப் பெரிய குற்றச்சாட்டு வடக்கு – கிழக்கில் வாக்குப்பதிவு வீதம் குறைந்ததுக்கு பிரதான காரணம். கட்சிகள் தாங்கள் நினைத்தபடி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. இலங்கை தமிழரசுக் கட்சியில் வன்னி தேர்தல் தொகுதி, யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல் தொகுதி வேட்பாளர்கள் அதிக மானவர்கள் மிக மிகப் பொருத்த மற்றவர்கள். அவர்கள் பல்வேறு விதமானவிமர்சனத்துக்குஉள்ளாகியவர்கள். இவர்களை மக்கள் எப்படி நம்பி வாக்களிக்க முடியும்? இதே நிலைப்பாட்டை தான் ஜனநாயகக் கூட்டணியும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸும் ஏற்படுத்தின. தனிநபர்களினுடைய செல்வாக்கே இந்த தேர்தலில் வெற்றியை நோக்கி நகர்த்தியது வன்னியில், முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்பாட்டு அரசியலில் இருந்த ரவிகரன் அந்த மாவட்டத்திலேயே பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் சிறீதரன் பெரும்பான்மையான வாக்குகளை பெற்றிருந்தார். இந்த இருவரையும் தவிர ஏனையவர்கள் தனிமனித செல்வாக்கு இன்மையால் பின்தங்கிப் போகக் கூடிய நிலைமைதான் ஏற்பட்டது. கட்சி மீதான அபிமானமோ, சின்னத்தின் மேலான ஈர்ப்போ, கொள்கை மீதான பிடிப்போ, கோட்பாடு ரீதியான சித்தாந்த தெளிவோ இருக்கவில்லை. இருக்கக்கூடிய நிலையில்

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம்!!

தொடர்ச்சி▲

உள்ள வேட்பாளர்களை இவர்கள் நியமிக்கவும் இல்லை. அதனால் தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் மக்களில் எந்த தவறும் இல்லை. மக்கள் விரும்பத்தகாத வேட்பாளர்களை நிறுத்திவிட்டு வாக்களியுங்கள் என்று சொன்னால் மக்கள் எப்படி வாக்களிப்பார்கள்? மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர். குழம்பி இருந்த மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளார்கள். இதற்குக் காரணம் தமிழ்க்கட்சிகளே.

வன்னியில் கால் நூற்றாண்டுக்கு மேலாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வரும் அடைக்கலநாதனின் நிலைமை மிகப் பரிதாபத்துக்குரியது. வன்னி வாக்காளர்கள் மொத்தம் மூன்று லட்சத்து 6 ஆயிரத்து 81. இதில் ஜனநாயக தேசிய கூட்டணி பெற்றுக் கொண்ட வாக்கு 21 ஆயிரத்து 102. அடைக்கலநாதன் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்கு 5,695. இலங்கையிலே ஆகக் குறைந்த விருப்பு வாக்கில் நாடாளுமன்றம் போகும் மிக மூத்த நாடாளுமன்ற உறுப்பினர். இந்த நிலை தேவையா? இளையவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து விட்டு ஒதுங்க வேண்டிய நேரத்தில், இவ்வளவு மோசமாகப் பின்னடைவைச் சந்தித்து, கடைசி வாக்கில் ஓர் அவமானகரமான வெற்றியைப் பெற்று அதில் நாடாளுமன்றம் போய், இவர் என்ன சாதிக்கப் போகிறார்? ஜனநாயகத்தில் மக்களினுடைய விருப்புக்கு மாறாக இருப்பதாக உணர்ந்து கொண்டால் அதை விட்டு ஒதுங்கி விடுவதுதான் புத்திசாலித்தனமான ஜனநாயக மரபும் பண்பியல்பும். அதைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்து கொள்ளவில்லை. வேட்பாளரைப் போடுகின்ற போது சமூக செயற்பாட்டாளரா என்பதனை சிந்திக்க வேண்டும். சமூக விரோதிகளையும், போதைப்பொருள் வியாபாரிகளையும், கள்ளமண் காரர்களையும் வேட்பாளராக நியமித்து தாம் நியமிப்பவர்கள் வெற்றி பெறுவார்கள் என நம்புகிறார்கள். ஏதோ இவர்கள் எல்லாம் தாங்கள் ஒரு ஜெயலலிதா என மனசுக்குள் கற்பனை செய்கிறார்கள் – இந்தக் கட்சிகளின் தலைவர்கள் எனச் சொல்லப்படுபவர்கள்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் கிளர்ச்சியில் ஈடுபட்ட வைத்தியர் யாழில் வெற்றி பெற்றிருப்பது கடந்த கால அரசியல்வாதிகளின் செயலை கேள்விக்கு உட்படுத்துகிறது. அவருடைய தனி மனித ஒழுக்கமின்மையும், முறைகேடான செயல்பாடும், நாகரீகமற்ற வார்த்தைகளும், நடைமுறை கடந்த செயல்பாடுகளும் அப்பட்டமானவை. அத்தகைய ஒருவரை மக்கள் தெரிவு செய்து இருக்கிறார்கள் என்றால் மக்கள் எதை நோக்கி நகர்கிறார்கள்? இந்தக் கேள்விக்கு யாரிடத்திலும் பதில் இல்லை. இதே நிலையைத் தான் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து இருக்கின்ற நிலையும். யார் என்றே தெரியாதவர்களுக்கு எல்லாம் வாக்களித்து இருக்கிறார்கள்.

இங்கு நடந்த மிகப்பெரிய ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்ட இழப்புகள், துன்பங்கள், துயரங்கள், வலிகள் போன்றவற்றை எதனையும் புரிந்து கொள்ளாமல் – அந்த வலிகளுக்கான காரணங்கள் அத்தனைக்கும் ஜே.வி.பிக்கும் பங்கு உண்டு என்பதனை உணராமல் – தேச மீட்பர்கள் என அவர்களை கொண்டாடுவது என்பது இந்த இனத்துக்கும் விடுதலைக்கு போராடி மடிந்த விடுதலை வீரர்களுக்கும் நாம் செய்யும் பெரும் துரோகமாகும்.

இந்த நிலையை ஏற்படுத்தியது தமிழ் கட்சிகளே. அவர்களில் பலர் தங்களின் தார்மீக நிலையை உணர்ந்து அரசியலில் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் காலம் அவர்களையும் ஓய்வுக்கு அனுப்பும்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுமந்திரனின் தோல்வி வியப்புக்குரியது அல்ல. தனக்கு சாதகமாக பல வேட்பாளர்களை அவர் களத்தில் நிறுத்தி இருந்தார். அவரால் நிறுத்தப்பட்ட எந்த வேட்பாளரும் மக்கள் அபிமானம் பெற்றவர்கள் அல்லர். சமூகத்தில் வெறுப்புக்குரியவர்களை அவர் அழைத்துச் சென்றதனால் அவரும் தோற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உட்பட்டுள்ளார். அவருக்கு சட்ட அறிவுப்புலமை இருக்கிறது. ஆனால் அரசியல் மதிநுட்பமோ, தேர்தல் வியூகமோ, வக்காளரைக் கவரும் தந்திரமோ, வாக்குப் பெறும் யுக்தியோ, நிர்வாக நெறிமுறையோ அவருக்கு கிஞ்சித்துமில்லை. அவர் பேச வேண்டிய இடத்தில் பேசக்கூடாத வார்த்தைகளை – கருத்துகளை – பேசுவதனால்தான் அவருக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டது. இனியாவது அவர் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். தான் அருகில் யாரை வைத்திருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். எதிர்ப்பு வாக்குகளையும் இலக்காக்கவில்லை, சார்பு வாக்குகளையும் நோக்காக்கவில்லை. வெறுமனே தேர்தல் வாக்குகளை மட்டும் இலக்கு வைத்தமையால் பின்னடைவு கண்டுள்ளார்.

இந்த விடயத்தில் மட்டக்களப்பில் சாணக்கியன் அனுபவமற்றவராக இருந்தாலும் மிகவும் தந்திரமாக தேர்தலை நகர்த்தி பெரு வெற்றி பெற்றுள்ளார். அரசியலுக்கு அறிவை விட தந்திரமும் சமயோசிதமும் அவசியம். அதை இதுவரை சுமந்திரன் உணராதமை வேடிக்கையே. இந்தத் தேர்தலில் டக்ளஸ் தேவானந்தாவின் தோல்வி, பிள்ளையானின் தோல்வி, ஒட்டுக்குழு அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது என்றே கூறலாம். 2004 இல் புலிகளின் பெரும் ஆதரவோடு நடந்த தேர்தலில் கூட ஒரு ஆசனத்தை தக்க வைத்த டக்ளஸ் இந்த தேர்தலில் தோல்வியடைந்து இருப்பது அவருடைய வாக்காளர்கள், நலன் சார்ந்தவர்கள்தான், நிலையானவர்கள் அல்லர் என்பதனை எடுத்துக் காட்டியுள்ளது.

தெற்கு அரசியல் களத்திலும் பல மூத்த அரசியல்வாதிகளுக்கு மக்கள் ஓய்வு அளித்துள்ளனர். மாற்றம் அவசியம். அந்த மாற்றம் ஏற்றத்தை நோக்கி நகரக் கூடியதாக இருந்தால் சமூகம் உயர்வடையும்.

தேர்தலிலே ஆளுங்கட்சிக்கு எதிராகவோ ஜே.வி.பியின் கடந்த கால இனவாத கோர முகத்தை தமிழ் மக்கள் மத்தியிலே எடுத்துக்

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம்!!

**தொடர்ச்சி▲**

கூறவில்லை. தேர்தல் காலத்தில் நடத்தக்கூடிய பிரமாண்டமான கூட்டங்கள் நடைபெறவில்லை. சுவாரசியமான அரசியல் பேச்சுக்கள் இடம்பெறவில்லை. உள்ளூராட்சி மன்ற வட்டார தேர்தல் நிலையிலேதான் இந்த நாடாளுமன்றத் தேர்தலை தமிழ்த் தேசிய கட்சிகள் அணுகின. தங்களுக்குள் இருந்த உள்ளக முரண்பாட்டை மேடைகள் தோறும் தவறாமல் சந்தி சிரிக்க உரைத்தனர். ஊடகங்களும் அதை மகிழ்வித்து வெளிப்படுத்தினர். பொது எதிரியை இலக்கு வைக்காமல் தங்களுக்குள் மோதிக்கொண்டதால் மக்கள் இவர்களை புறக்கணித்து விட்டனர். ஆளுக்கு ஒரு கட்சியும் அணிக்கு ஒரு சுயேச்சைக் குழுவும் வாக்காளர்களைக் குழப்பி விட்டன. கட்சிகளும் ஒழுங்கற்ற வேட்பாளர்களை நியமித்தமையால் குழம்பிய வாக்காளர்கள் வாக்களிக்க விருப்பம் கொள்ளவில்லை. மாறாக, தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விடலாம் எனும் மனோ நிலையை அது ஏற்படுத்தி உள்ளது.

இனியும் தமிழ்க்கட்சிகள் தங்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தாமல் – ஐக்கியப்படாமல் – மற்றவர்களுக்கு “துரோகி“ பட்டம் வழங்கிக் கொண்டு இருந்தால் – தொடர்ந்தும் தனித்தவில் அடிப்பார்களாக இருந்தால் – வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தலோடு இவர்கள் காணாமல் போய்விடுவார்கள். தேசிய அரசியல் கட்சிகளுக்குள் தமிழ் மக்கள் கரைந்து போவது என்பது இந்த இனத்தின் இருப்பை மிக மோசமாக கேள்விக்குட்படுத்தும். நிலப்பறிப்பு, குடிப்பரம்பல் மாற்றம் விடயத்தில் மிகப்பெரிய விளைவை சந்திக்க நேரிடும். அசுர பலத்தோடு ஆட்சி அமைத்துள்ள அரசு எவ்விதமான தமிழர் விரோத நடைமுறையை கொண்டு வரப் போகிறது என்று புரியவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எந்தவிதமான தெளிவுமின்றி அபிவிருத்தியே அடிப்படைப் பிரச்சினை எனக் கூறும் ஜே.வி.பியால் தமிழ் மக்களினுடைய அரசியல் இருப்பு எவ்வளவு தூரம் கேள்விக்குட்பட போகிறது என்பதனை உணராமல் தங்களுக்குள் சண்டை போட்டு முட்டி மோதிக்கொண்டு தமிழர் தரப்பு தெருவுக்கு வந்துவிட்டது. தமிழ்த்தேசியக் கட்சிகளும் மதுபானம், வாக்குக்குப் பணம், உணவுப் பொதி என வழங்கியும் மக்கள் வாக்களிக்கவில்லை என்றால் மக்களிடத்தில் தவறா கட்சிகள் இடத்தில் தவறா என்பதனை இந்த கட்சி தலைமைகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இல்லையேல் இவர்களுள் மீதமுள்ளவர்களும் காலத்தால் விரைவில் காணாமல் போய்விடுவார்கள்.

தவறுகள் யாவும் கட்சிகளிடமே தவிர வாக்காளனிடம் அல்ல. கொள்கைகளை கொள்ளை அடித்தது கட்சிகளே, மக்கள் அல்லர்.



# 7 மலையக எம்.பிக்கள் சபைக்குத் தெரிவு!
# முன்னாள் எம்.பிக்கள் அறுவர் தோல்வி!!

நாடாளுமன்றத் தேர்தலில் ஏழு மலையக எம்.பிக்கள் தெரிவாகியுள்ளனர். அத்துடன், முன்னாள் மலையக எம்.பிக்கள் அறுவர் தோல்வியடைந்துள்ளனர்.

நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இருந்தே மலையகத் தமிழ்ப் பிரதிநிதித்துவம் வென்றெடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட கிஷ்ணன் கலைச்செல்வி 33 ஆயிரத்து 346 வாக்குளைப் பெற்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜீவன் தொண்டமான் 46 ஆயிரத்து 438 வாக்குகளைப் பெற்றும், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பழனி திகாம்பரம் 48 ஆயிரத்து 18 வாக்குளைப் பெற்றும், வே.இராதாகிருஷ்ணன் 42 ஆயிரத்து 273 வாக்குகளைப் பெற்றும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் இருந்து கிட்ணன் செல்வராஜ், அம்பிகா சாமுவேல் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட சுந்தரலிங்கம் பிரதீப்பும், மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட சரோஜா போல்ராஜ்/ம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசியப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள இராமலிங்கம் சந்திரசேகரனும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினால் மொத்தமாக 8 மலையக எம்.பிக்கள் இம்முறை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவர்.

மனோ கணேசன் தேசியப் பட்டிலில் வந்தால் அந்த எண்ணிக்கை 9 ஆக உயரும்.

வேலுகுமார், அரவிந்தகுமார், உதயகுமார், மருதபாண்டி ராமேஸ்வன் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.






# 10 பச்சிளம் குழந்தைகள் பலியான உ.பி. மருத்துவக் கல்லூரி தீ விபத்து

## உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவு

உத்தரப் பிரதேசம் ஜான்சியில் உள்ள அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் இடம்பெற்ற தீ விபத்தில் 10 பச்சிளம் குழந்தைகள் உயிரிழுந்த நிலையில், இச்சம்பவம் குறித்து விசாரிக்க அம்மாநில அரசு உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

அதேவேளையில், அரசு நிர்வாகம் மீது எதிர்கட்சிகள் சாடியுள்ளன.

உத்தரப் பிரதேசத்தின் ஜான்சியில் உள்ள மகாராணி லட்சுமிபாய் கல்லூரியின் பிறந்த குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 குழந்தைகள் உயிரிழுந்தன. 16 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.45 மணி அளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தின்போது பச்சிளம் குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவில் 52 முதல் 54 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டிருந்தன என மருத்துவக் கல்லூரி தெரிவித்துள்ளது. மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. இருப்பினும், அதற்கான காரணம் என்ன, யாருடைய கவனயீனத்தால் இது நடந்தது என்பதை அறிய விரிவான விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும், துணை முதல்வர் பிரிஜேஷ் பதக் மற்றும் முதன்மை சுகாதார செயலர் ஆகியோரை சம்பவ இடத்துக்கு அனுப்பியதாக மாநில அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உத்தரப் பிரதேச துணை முதல்வர் பிரஜேஷ் பதக் சனிக்கிழமையன்று, சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று பார்வையிட்டார்.

இது குறித்து பேசிய அவர் கருத்து தெரிவிக்கையில்,

“கவனக் குறைவாகவும், சரிவர வேலை செய்யாத நபர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள காரணங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். காயமடைந்த குழந்தைகளுக்கு தரமான சிகிச்சை அளிப்பது முதல் சவால். தீயணைப்புத் துறையினரும் இது குறித்து விசாரணை மேற்கொள்வார்கள். இச்சம்பவம் குறித்து விசாரிக்க அரசு உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. மேலும், மாஜிஸ்திரேட் விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.”- என்றார்.



# கள் இறக்கும் போராட்டம்; நாம் தமிழர் கட்சி ஆதரவு

## சீமான் அறிவிப்பு

தமிழ்நாடு கள் இயக்கம் சார்பில் ஜனவரி .21 ஆம் திகதி நடைபெறவுள்ள கள் இறக்கும் போராட்டத்துக்கு நாம் தமிழர் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்ட அறிக்கையில்,

“தமிழ்நாடு கள் இயக்கம் சார்பில் வரும் ஜனவரி 21 ஆம் திகதி நடைபெறும் தென்னை மரங்களில் இருந்து கள் இறக்கிச் சந்தைப்படுத்தும் போராட்டத்துக்கு நாம் தமிழர் கட்சி தனது முழு ஆதரவையும் அளிக்கும். அத்துடன் போராட்டத்தில் பங்கேற்று கோரிக்கைகளை வெல்லவும் துணை நிற்கும்.

தமிழர் வாழ்வியலின் ஒரு கூறாக விளங்கிய கள்ளுக்கு தமிழக அரசு விதித்துள்ள தடையை எதிர்த்து, கள் இறக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தொடர்ச்சியாகப் பல்வேறு அறப்போராட்டங்களை முன்னெடுத்துவரும் தமிழ்நாடு கள் இயக்கத்துக்கு எனது வாழ்த்துகள்,” என்று குறிப்பிட்டுள்ளார்.





# லெபனான் சிவில் பாதுகாப்பு மையத்தின் மீது இஸ்ரேலின் தாக்குதல்; 12 வைத்தியர்கள் பலி

## உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவு

லெபனானின் சிவில் பாதுகாப்பு மையத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 12 வைத்தியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்,

உலக சுகாதார ஸ்தாபனம் இந்த தாக்குதலுக்கு தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலால் நேற்று முன்தினம் மாத்திரம் லெபனானில் 59 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 182 பேர் காயமடைந்துள்ளனர்.

லெபனானின் சுகாதார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.







# ரஷ்யாவுடனான போர் விரைவில் நிறைவுக்குக் கொண்டு வரப்படும்

## உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவிப்பு

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றவுடன் ரஷ்யாவுடனான போர் விரைவாக நிறைவுக்குக் கொண்டு வரப்படும் என உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் ஊடகமொன்று வழங்கிய செவ்வியொன்றில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்ற பின்னர் அவருடன் தொலைபேசி ஊடாக ஆக்கப்பூர்வமான கருத்து பரிமாற்றம் இடம்பெற்றதாக விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், ரஷ்யாவுடனான சாத்தியமான பேச்சுவார்த்தைகள்தொடர்பில்டொனால்ட்ட்ரம்ப்எந்தவொரு தகவல்களையும் தெரிவிக்கவில்லை எனவும் ஆனால் உக்ரைனின் நிலைப்பாட்டிற்கு மாறாக எந்த விடயத்தையும் கூறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதே தமது முதன்மையான நோக்கம் எனவும், உக்ரைனுக்கான இராணுவ உதவிகளை அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கும் என்றும் டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதியுடனான தொலைபேசி உரையாடலில் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், உக்ரைன் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் எனவும் இதனால் போர் இராஜதந்திர ரீதியாக முடிவுக்குக் கொண்டு வரப்படும் என உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -17.11.2024




இன்று அனுகூலமான நாள். இன்று வெளிப்படையாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் உறுதியுடனும் நேர்மறையாகவும் இருங்கள்.

உங்கள் பணியை முறையான அணுகுமுறையுடன் கையாள வேண்டும் நேர்மறையான பலன்களைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்கும் கட்டாயம் உண்டாகும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நடப்பவைகளை லேசாக எடுத்துக்கொள்வது நல்லது. அதிகமாக யோசிப்பதையும் மிகுந்த உணர்ச்சிவசப்படுதலையும் தவிர்க்க வேண்டும்.




இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வீர்கள். இன்று பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும்.

நீங்கள் உங்கள் பணியில் சவால்களை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறைவேற்றுவதற்கு உன்னதமான திட்டமிடல் வேண்டும்.

உங்கள் துணையுடன் நுண்ணுணர்வோடு காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணவரவிற்கான சாத்தியம் இல்லை. உங்கள் நிதிநிலையை நன்றாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




சில நேர்மறையான மாற்றங்கள் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். பணிச் சுமை காரணமாக நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மிகுந்த பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்ள நேரலாம். உங்கள் துணையிடம் பக்குவமான அணுகுமுறையை கையாள வேண்டும்.

பணப் பற்றாக்குறையை சந்திப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

தலைவலி அல்லது தொண்டை சம்பந்தமான வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது நல்லது.




முக்கியமான முடிவுகள் எடுக்கும் போது சிறிது கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பிரச்சினைகளைச் சந்திக்க நேரும்.

நீங்கள் பணி நிமித்தமாக ஒரு சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் மனதில் காதல் வயப்பட்ட எண்ணங்கள் காணப்படும். உங்கள் துணையுடனான நடத்தையில் அது வெளிப்படும்.

நல்ல விசேஷங்களுக்குாக பணம் செலவு செய்ய நேரிடும். உங்கள் உடன் பிறந்தோர் வீட்டு விசேஷங்களில் பங்கேற்பீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்.




இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள். அதனால் திருப்தி ஏற்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள்.

உங்களின் திறமை காரணமாக பணிகளை செவ்வனே செய்து முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனதில் உணர்ச்சிகரமான உணர்வுகள் காணப்படும். உங்கள் துணையுடனான உறவை இது வலுப்படுத்தும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும். உங்களால் வங்கியில் பணத்தை சேமித்து சேமிப்பை அதிகமாக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியளிக்கும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். தினசரி செயல்களை மேற்கொள்வதும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பின்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேரந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

செலவுகள் பெருகி காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு நீங்கள் கடன் வாங்குவீர்கள்.

சளித்தொல்லைகளால் பாதிப்புகள் ஏற்படலாம். குளிர்மையான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் நீங்கள் அதை சரிகட்டி செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணஇழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தொண்டை எரிச்சலுக்கான சாத்தியம் காணப்படுகின்றது. குளுமையான உணவு உட்கொள்வதை தவிரத்தல் நல்லது.




அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள் நலம் பயப்பதாக காணப்படும். சலுகைகளும் ஊக்கத் தொகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -17.11.2024




உங்கள் பொறுமை சோதிக்கப்படும். என்றாலும் மேறகொண்டு திட்டமிடுவதற்கு அது உங்களுக்கு நன்மை தருவதாக அமையும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மற்றும் மந்திரங்களை கேட்பது மன அமைதியை ஏற்படுத்தும்.

சிறப்புடன் பணியாற்றுவீர்கள். பதவி உயர்வு வடிவத்தில் பாராட்டுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் புரிந்துணர்வின் மூலம் உங்கள் துணையுடன் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்களின் அர்ப்பணிப்பான பணி காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அத்தகைய உற்சாகம் உஙகளுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் பார்வை நேர்மறையானதாக காணப்படும்.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சூடு அல்லது வெப்ப சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




பயண அலைச்சல்களும் அதன் காரணமாக சோர்வும் காணப்படும். உங்கள் முயற்சியில் நல்ல பலன்களைப் பெறுவதற்கு உங்களை அமைதியாக வைத்திருக்க முயலுங்கள்.

மிகுந்த முயற்சிகளை எடுத்து நிறைய வேலைகள் செய்த பொழுதும் உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்காது.

உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் துணையிடம் சாந்தமான அணுகுமுறை வேண்டும். உங்கள் பதட்டமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவது நல்ல புரிந்துணர்வுக்கு அனுகூலமாக அமையாது.

பணம் நிறைய கிடைக்காது. ஆனால் கடனுக்கு விண்ணப்பித்தால் உங்கள் கடனுக்கான ஒப்பளிப்பு கிடைக்கும்.

தொண்டை சம்பந்தமான பிரச்சினைகளால் அவதியுற நேரலாம்.எனவே குளிர்மையான உணவுகள் உட்கொள்வதை தவிர்ப்பது நல்லது.




இன்றைய நாள் முற்போக்கான நாளாக அமைய நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். கவலையை விட்டொழித்து நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் செய்கின்ற பணியில் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் நட்பான அணுகுமுறை மூலம் உங்களின் துணையை மகிழ்விப்பீர்கள். இது அவருடனான புரிந்துணர்வை அதிகரிக்கும்.

உங்களிடமுள்ள பணத்தைக் கொண்டு நலமாக இருப்பீர்கள். நீண்ட நாள் நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மிகுந்து காணப்படும்.





